ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ இவையும் அவையும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இவையும் அவையும் ॥

ஆழ்வாரோடு எம்பெருமான் கலந்தவகை

‡இவையும் அவையும் உவையும்⋆ இவரும் அவரும் உவரும்⋆
எவையும் யவரும் தன் உள்ளே⋆ ஆகியும் ஆக்கியும் காக்கும்⋆
அவையுள் தனி முதல் எம்மான்⋆ கண்ண பிரான் என் அமுதம்⋆
சுவையன் திருவின் மணாளன்⋆ என்னுடைச் சூழல் உளானே (1)

சூழல் பல பல வல்லான்⋆ தொல்லையங்காலத்துலகை⋆
கேழல் ஒன்றாகி இடந்த⋆ கேசவன் என்னுடை அம்மான்⋆
வேழ மருப்பை ஒசித்தான்⋆ விண்ணவர்க்கெண்ணல் அரியான்⋆
ஆழ நெடுங்கடல் சேர்ந்தான்⋆ அவன் என் அருகல் இலானே (2)

அருகல் இலாய பெருஞ்சீர்⋆ அமரர்கள் ஆதி முதல்வன்⋆
கருகிய நீல நன் மேனி வண்ணன்⋆ செந்தாமரைக் கண்ணன்⋆
பொரு சிறைப் புள்ளுவந்தேறும்⋆ பூ மகளார் தனிக் கேள்வன்⋆
ஒருகதியின்சுவை தந்திட்டு⋆ ஒழிவிலன் என்னோடுடனே (3)

உடன் அமர் காதல் மகளிர்⋆ திருமகள் மண்மகள் ஆயர்
மட மகள்⋆ என்றிவர் மூவர் ஆளும்⋆ உலகமும் மூன்றே⋆
உடன் அவை ஒக்க விழுங்கி⋆ ஆல் இலைச் சேர்ந்தவன் எம்மான்⋆
கடல் மலி மாயப் பெருமான்⋆ கண்ணன் என் ஒக்கலை யானே (4)

ஒக்கலை வைத்து முலைப் பால் உண் என்று⋆ தந்திட வாங்கி⋆
செக்கஞ்செக அன்றவள் பால்⋆ உயிர் செகவுண்ட பெருமான்⋆
நக்க பிரானோடு⋆ அயனும் இந்திரனும் முதலாக⋆
ஒக்கவும் தோற்றிய ஈசன்⋆ மாயன் என் நெஞ்சின் உளானே (5)

மாயன் என் நெஞ்சின் உள்ளான்⋆ மற்றும் யவர்க்கும் அதுவே⋆
காயமும் சீவனும் தானே⋆ காலும் எரியும் அவனே⋆
சேயன் அணியன் யவர்க்கும்⋆ சிந்தைக்கும் கோசரம் அல்லன்⋆
தூயன் துயக்கன் மயக்கன்⋆ என்னுடைத் தோள் இணையானே (6)

www.prapatti.com

தோள் இணை மேலும் நன் மார்பின்
    மேலும்⋆ சுடர் முடி மேலும்⋆
தாள் இணை மேலும் புனைந்த⋆
    தண்ணம் துழாய் உடை அம்மான்⋆
கேள் இணை ஒன்றும் இலாதான்⋆
    கிளரும் சுடர் ஒளி மூர்த்தி⋆
நாள் அணைந்தொன்றும் அகலான்⋆
    என்னுடை நாவின் உளானே (7)

நாவினுள் நின்று மலரும்⋆ ஞானக் கலைகளுக்கெல்லாம்⋆
    ஆவியும் ஆக்கையும் தானே⋆ அழிப்போடளிப்பவன் தானே⋆
பூவியல் நால் தடந்தோளன்⋆ பொரு படை ஆழி சங்கேந்தும்⋆
    காவி நன் மேனிக் கமலக் கண்ணன்⋆ என் கண்ணின் உளானே (8)

கமலக் கண்ணன் என் கண்ணின் உள்ளான்⋆
    காண்பன் அவன் கண்களாலே⋆
அமலங்கள் ஆக விழிக்கும்⋆
    ஐம்புலனும் அவன் மூர்த்தி⋆
கமலத்தயன் நம்பி தன்னைக்⋆
    கண்ணுதலானொடும் தோற்றி⋆
அமலத் தெய்வத்தோடுலகம் ஆக்கி⋆
    என் நெற்றி உளானே (9)

நெற்றியுள் நின்றென்னை ஆளும்⋆ நிரை மலர்ப் பாதங்கள் சூடி⋆
    கற்றைத் துழாய் முடிக் கோலக்⋆ கண்ண பிரானைத் தொழுவார்⋆
ஒற்றைப் பிறை அணிந்தானும்⋆ நான்முகனும் இந்திரனும்⋆
    மற்றைய மரரும் எல்லாம் வந்து⋆ எனதுச்சி உளானே (10)

‡உச்சியுள்ளே நிற்கும் தேவ தேவற்குக்⋆ கண்ண பிராற்கு⋆
    இச்சையுள் செல்ல உணர்த்தி⋆ வண் குருகூர்ச் சடகோபன்⋆
இச்சொன்ன ஆயிரத்துள்⋆ இவையும் ஓர் பத்தெம்பிராற்கு⋆
    நிச்சலும் விண்ணப்பம் செய்ய⋆ நீள் கழல் சென்னி பொருமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com